# தெற்காசிய சமூகத்தில் நிறவாதமும், “கறுப்பு நிற எதிர்ப்பு”டன் அதற்குள்ள தொடர்புகளும்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

நிறவாதம் என்பது கறுப்பு நிறத்தவர்களை விட வெளிர் நிறமுடையவர்கள் சிறப்புரிமைகளைப் பெறும் பாகுபாடு என வரையறுக்கப்படுகிறது.[1]





வெளிர் நிற தோலை கொண்டவர்களை விட கறுப்பு நிறத்தவர்கள் குறைவான அழகுடையவர்கள், குறைந்த வெற்றியாளர்கள், குறைந்த மரியாதைக்குரியவர்கள் போன்ற அநீதியான நம்பிக்கைகளை இது உள்ளடக்கியது.

1. Hussain, M., 2022

# காலனித்துவத்தில் நிறவாதத்தின் வேர்கள்


இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

காலனித்துவ வரலாற்றின் வன்முறையில் நிறவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளது. [2]



வெளிர் தோல் பற்றிய மதிப்பீடானது கரீபியன் மற்றும் அமெரிக்க வெள்ளை இனத் தூய்மை பற்றிய நீடித்த கட்டுக்கதைகளின் காலனித்துவ ஆண்டான்-அடிமைச் சமூகங்களுடன் ஆழமாக பிணைக்கப்பட்டுள்ளது. [3]

One-drop rule படி பார்க்கையில், கறுப்பின வம்சாவளியைச் சேர்ந்த ஒரு மூதாதையரைக் கொண்ட எந்தவொரு நபரும் வெள்ளை இனத்தவராகக் கருதப்பட மாட்டார்.

2. Hussain, M., 2022
3. Hussain, M., 2022

# தெற்காசிய சமூகத்தில் நிறவாதம்



இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

இனவாதம் தொடர்பான தெற்காசியர்களின் அனுபவங்கள், இனவாதம், நிறவாதம் தொடர்பான கறுப்பின மக்களின் அனுபவங்களுக்கு இணையானதாக கொள்ள முடியாது. அதே வேளை அவர்களின் அனுபவத்தின் கூறுகள் நம் வாழ்விலும் இருந்தாலும், அவை அதே அளவினதாக இருக்காது.

இருப்பினும், தெற்காசிய சமூகங்களும் தங்கள் காலனித்துவ வரலாற்றின் மரபுகளுடன் போராடுகின்றன.

**Some examples include:**

- காலனித்துவ சிந்தனையாளர்கள் வலுவான வெளிர் நிற சருமமுடையவர்களை ஆரியர்கள் எனவும் சிறிய, கறுத்த சருமம் உடையவர்களை பண்படாத திராவிடர்கள் எனவும் வேறுபடுத்துகிறார்கள்.
- இந்திய குடிசார் அரசுப் பணி உறுப்பினராகவுள்ள காலனித்துவ இனவமைப்பியலாளரொருவர், "அடர் கறுப்பு" முதல் "சிவந்த வெள்ளை நிறம்" வரையில் பல்வேறு சாதிகளை வகைப்படுத்தியதன் மூலம் இந்தியர்களை மேலும் இனமயமாக்கினர்.
- நிறவாதம் தெற்காசிய சமூகத்தை மட்டுமல்லாது, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய சமூக உறுப்பினர்களையும் பாதிக்கிறது

4. Hussain, M., 2022
5. Hussain, M., 2022

# சாதி அமைப்பின் குறிகாட்டியாக நிறவாதம்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

தெற்காசிய சமூகங்களில், நிறவாதமானது சாதி அமைப்பின் தொடர்ச்சியான எச்சமாக உள்ளது.

Tவெளிர் தோல் மீதான விருப்பம் என்பது சாதிய ஒடுக்குமுறையின் ஒரு வடிவம்.



தாழ்த்தப்பட்ட சாதியினர், வெளியில் வேலை செய்வதாலும், உடல் உழைப்பில் ஈடுபடுவதாலும் கருமையான தோலை பெற்றனர். இருப்பினும், உயர் சாதி உறுப்பினர்கள் வெயிலை தவிர்க்க முடிந்தது, இதனால் பெரும்பாலான நேரங்களில் வெயிலில் இருந்து விலகி இருந்தனர்.

தோல் நிறமானது, சிறப்புரிமை, சாதி, தூய்மை, சமூக பொருளாதார நிலை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

# சாதி அமைப்பின் குறிகாட்டியாக நிறவாதம்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

தீண்டத்தகாதவர்களென ஒதுக்கப்பட்டுள்ள தலித்துகள், சாதி அமைப்பில் மிகவும் தாழ்ந்த குழுவாக, சாதியமைப்பிலிருந்து முற்றிலும் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். 6

- அவர்கள் பெரும்பாலும் மிகவும் தீவிரமான நிறவாதத்தை எதிர்கொள்வதுடன், அவர்களின் கருமையான தோலின் காரணமாக பெரும்பாலும் தூய்மையற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள்..
- தலித் அறிஞரும் இந்திய அரசியலமைப்பின் சிற்பியுமான B.R.அம்பேத்கர், இந்த பிளவுகள் வரலாற்று ரீதியாக பல நூற்றாண்டுகள் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியால் ஆழமடைந்துள்ளதையும் இனவாதத்தை எதிர்த்து நிற்க இயலாத, வலிமை இழப்பை குறித்துநிற்பதையும் சுட்டிக்காட்டினார்.

**இப்போது பெரும்பாலான சமூகங்களில் சாதி அமைப்பு ஒழிக்கப்பட்டுள்ள நிலையில், வெள்ளைத் தோல் நிறம் சிறந்தது எனும் தவறான எண்ணங்கள் நிலைத்து நிற்கின்றன.**

6. Tenneti, A., 2020
7. Tenneti, A., 2020



# திருமண மூலதனமாக தோல் நிறம்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

வரலாற்று ரீதியாக, தெற்காசிய கலாசாரங்கள் பெண்களுக்கு பொருளாதார சுதந்திரத்தை அனுமதிக்கவில்லை. இது திருமணம் செய்தவர்களுக்கு அதிக மதிப்பை அளித்தது. [8]

பல அறிஞர்கள் தெற்காசிய சமூகங்களில் திருமண மூலதனத்துடன் நிறத்தை தொடர்புபடுத்தியுள்ளனர்.



இதற்குக் காரணம் தெற்காசிய சமூகங்களில், திருமணம் எனும் ஆணாதிக்க நிறுவனம் வரலாற்று ரீதியாக வெளிர் தோலை ஒரு வகை திருமண மூலதனமாக மாற்றியுள்ளதுடன், அதனை வரதட்சணை கோருவதிலும் பேரம் பேசும் பொருளாக்கியுள்ளது. [9]

8. Kukreja, R., 2021
9. Kukreja, R., 2021

# நிறவாதமும் தோலை வெளிற்றும் தயாரிப்புகளும்



இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

துரதிர்ஷ்டவசமாக, நிறவாதம் மற்றும் அழகு, வெற்றி, அந்தஸ்து ஆகியவற்றுடன் வெளிர்/லேசான நிறத்தின் தொடர்பு காரணமாக தோலை வெளுக்கும் பொருட்கள் பல ஆசிய சமூகங்களிடையே பிரபலமடைந்துள்ளன.

வெள்ளையாக அல்லது வெளிர் நிறமாக இருப்பதை அழகானது வனப்பானது எனும் நேர்மறைத் தன்மையுடன் பரவலாக சந்தைப்படுத்தப்படும் தயாரிப்புகளைக் கொண்ட பல மில்லியன் டொலர் வர்த்தகமாக இந்த தோலை வெளிற்றும் களிம்புகளும் (cream) தயாரிப்புகளும் உள்ளன.
மேலும், இந்த வணிக அடையாளங்களுடன் (brands) பயன்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் தந்திரங்கள் ஒரே மாதிரியான கொள்கைகளை நிலைநிறுத்துகின்றன. மேலும், நிறவாதத்துடன் தொடர்புடைய சமூக பிரச்சினைகளை அதிகரிக்கின்றன.

தோலை வெளிற்றுதலும், வெளிரச் செய்யும் நடைமுறைகளும் மிகவும் ஆபத்தானது என்றாலும், துரதிர்ஷ்டவசமாக இன்றும் பல சமூகங்களில் இது தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

# நிறவாதமும் இனவாதமும்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

நிறவாதம் நமது சமூகங்களுக்குள் வேரூன்றி உள்ளது, மேலும் நிறவாதத்திற்கும் இனவாதத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது. Dr Sarah L Webb அந்த வேறுபாடுகளுக்கு சிறந்த விளக்கத்தை கொடுத்துள்ளார். [10]

- "இனவாதம் வெளிப்படும் நிகழ்வுகளில், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த, ஒரே நிறத்தில் உள்ள இருவர் வெவ்வேறு விதமாக நடத்தப்படுவார்கள். நிறவாதம் வெளிப்படும் நிகழ்வுகளில் ஒரே இனத்தைச் சேர்ந்த, வெவ்வேறு தோல் நிறங்களைக் கொண்டிருப்பவர்கள் வெவ்வேறு விதமாக நடத்தப்படுவார்கள்."- Dr Sarah L Webb

**"கறுப்புத் தோலை விட வெளிர் தோலுக்கு வெகுமதி அளிக்கும் உலகில், நிறவாதம் என்பது இனவாதத்தின் மகள் போன்றது" என நிறவாத்தை நேர்த்தியாக சுருங்கக் கூறியுள்ளார் நடிகை *- Lupita Nyong'o.***

10. Khan, A., 2022

தெற்காசிய கலாசாரத்தில் நிலவும் சாதி மற்றும் நிறப் பிரச்சினைகள் கறுப்பு நிறத்தவர்களுக்கு எதிரான இனவாதத்தை அதிகரிக்கிறது.

கறுப்பின சமூகத்திற்கு உண்மையான கூட்டாளியாக இருப்பதற்கும், தெற்காசிய சமூகத்தில் கறுப்பின எதிர்ப்பு இனவாதத்தை நிவர்த்திப்பதற்கும், இனவாதம், நிறவாதம், சாதி பாகுபாடு மற்றும் ஒடுக்குமுறை ஆகியவற்றின் அன்றாட நடைமுறைகளை தகர்க்கும் குரல்களை நாம் வலுப்படுத்த வேண்டும்.

கறுப்பு நிறத்திற்கு எதிரான நமது சிக்கலான காலனித்துவ மரபுகளுடன், நாம் எம்மை உள்நோக்கி பார்த்து பரிசீலிக்கும் அதேவேளையில், வெளியேயுள்ள நடைமுறைகளையும் பரிசீலிக்க வேண்டும்.

நாம் நமது சொந்த சார்பு நிலைகளை உடைத்து, நமது சமூகங்களை பொறுப்புக்கூற வைக்க வேண்டும். தெற்காசிய சமூகத்தையும் பொழுதுபோக்குத் துறையையும் சீரழிக்கும் ஐரோப்பிய-மைய அழகு தரநிலைகள் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நமது தவறான சித்தாந்தங்கள் நமக்கு பயனளிக்காது, அவை வெள்ளை நிற மேன்மைவாதத்தை நிலைநிறுத்த மட்டுமே உதவுகின்றன. இனவாதத்தில் நமது தனிப்பட்ட பங்களிப்பைக் களைந்தால் தான் நமது தனிப்பட்ட நடத்தையை நம்மால் மாற்றிக்கொள்ள முடியும்.

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

**Looking to address and confront anti-Black racism in the South Asian community? Check out and these resources.**

- Read **The Karma of Brown Folk by Vijay Prashad**
    - The book examines the model minority myth in South Asian communities and explores how it has been consistently used as "a weapon in the war against Black America."

- Read **The Secret History of South Asian and African American Solidarity** by Anirvan Chatterjee

- Read Issue # 3 by **@burntrotiUK** on confronting anti-Blackness in South Asian communities

- If you're looking for resources for having a conversation with South Asian communities and family members read **"Confronting Anti-Blackness in South Asian Communities"** by Queer South Asian National Network

- **@SouthAsians4BlackLives** on Instagram
    - South Asians 4 Black Lives is a volunteer-led organization focused on educating South Asians on anti-Black racism.

- Ontario Alliance of Black School Educators
    - **@onabse_org** an organization that works to promote equity for African Canadian students, educators, and professionals at all levels in schools

- Urban Alliance on Race Relations
    - **@uarrtoronto** non- profit organization working to address inequality with educational programs, advocacy & research

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

# Works Cited


Estrada, M. (2020, May 31). *South Asians need to do more to fight anti-Black racism - National | Globalnews.ca*. Global News. Retrieved March 5, 2023, from https://globalnews.ca/news/6999013/commentary-south-asians-anti-black-racism/

Hussain, M. (2022, May 18). *Beauty and the Bleach: the colonial history of colourism explored in BBC documentary*. The Conversation. Retrieved March 5, 2023, from https://theconversation.com/beauty-and-the-bleach-the-colonial-history-of-colourism-explored-in-bbc-documentary-181278

Khan, A. (2020, July 10). *Call it 'Glow & Lovely' or 'Fair & Lovely', it still perpetuates colourism in our society. | South Asian Lifestyle*. Burnt Roti. Retrieved March 5, 2023, from https://www.burntroti.com/blog/call-it-glow-and-lovely-or-fairy-and-lovely-it-still-perpetuates-colourism-in-our-society

Kukreja, R. (2021). Colorism as Marriage Capital: Cross-Region Marriage Migration in India and Dark-Skinned Migrant Brides. *Official Publication of Sociologists for Women in Society, 35*(1), 85-109. https://doi.org/10.1177/0891243220979633

Tenneti, A. (2020, August 18). *Searching for anti-racism agendas in South Asian Canadian communities*. The Conversation. Retrieved March 5, 2023, from https://theconversation.com/searching-for-anti-racism-agendas-in-south-asian-canadian-communities-142431